# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. NO. 36 /2016**

**PW 14**

| | | |
|---|---|---|
| Name | : | நாகராஜன் |
| Father's/Husband's Name | : | சுப்பிரமணி |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.02.2025.

**Accused 1 - 5 and 7 present.**

**முதல் விசாரணை -**

நான் தற்போது திருப்பத்தூர் மாவட்டம் கியூ குற்றப்பிரிவு புலனாய்வு துறையில் காவல் துணை கண்காணிப்பாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 2015 ம் ஆண்டு தண்டராம்பட்டு காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன் . அப்போது 06.01.2015 ம் தேதியன்று காவல் உதவி ஆய்வாளர் திருமதி . தமிழரசி என்பவர் நிலைய குற்ற எண். 3/2015, சட்டப்பிரிவுகள் 323, 324, 147,148, 294(பி), 307 இதச - ன் கீழ் பதிவு செய்த வழக்கை என் பார்வைக்கு வைத்தார் . நான் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடமான ரா .அகரம் கிராமத்திற்கு சென்று சாட்சிகள் சீனுவாசன், பாண்டுரங்கன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் . **அந்த பார்வை மகஜர் அ .சா.ஆ.9. மாதிரி வரைபடம் அ .சா.ஆ.10** மேற்படி புகார்தாரர் கல்பனாவின் கணவர் பரசுராமன் என்பவர் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் இருந்து வேலூர் அரசு

மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து செல்லப்பட்டு அங்கு அவர் இறந்துவிட்டதாக தகவல் பெற்றேன் . அந்த தகவலின்அடிப்படையில் இந்த வழக்கினை சட்டப்பிரிவுகள் 323, 324, 147,148, 294(பி), 307 இதசவிலிருந்து சட்டப்பிரிவுகள் 323, 324, 147,148, 294(பி), 302 என பிரிவு மாற்றம் செய்து சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு பிரிவு மாற்ற அறிக்கை அனுப்பி வைத்தேன் . **அந்த அறிக்கை அ .த.சா.ஆ.11.** 07.01.2015 ம் தேதியன்று வேலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று வழக்கில் இறந்துபோன பரசுராமன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகளின் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன் . **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.12.** அந்த பிரேத பரிசோதனையின் போது காவலர் 106 முருகன் என்பவர் மூலம் மேற்படி பரசுராமன் என்பவரின் பிரேத உடற்கூராய்வு செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன் . **அந்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.13**.அதன்பின்னர் சாட்சிகள் கல்பனா , ஏழுமலை,செல்வராஜ்,பூமிநாதன், சிவபாக்கியம்,சேட்டு,பாண்டுரங்கன், சீனுவாசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . பின்னர் எனது விசாரணையில் இருந்தும் , சாட்சிகளை விசாரணை செய்ததில் இருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் இந்த வழக்கின் எதிரிகளை தேடிய போது திருவண்ணாமலை தண்டராம்பட்டு புலன் வைத்ததில் எதிரிகள் வேலு , தவமணி, பச்சையப்பன், ராமச்சந்திரன் ஆகியோர்கள் இராதாபுரம் பஸ் நிறுத்ததிடம் கும்பலாக இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் இராதாபுரம் பஸ் நிறுத்ததிடம் சென்று மேற்படி எதிரிகளை காரணம் கூறி கைது செய்தபோது எதிரி வேலு என்பவர் தானாக வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஏழுமலை , ராஜேந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன் . **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.14**. பின்னர் எதிரி வேலு தாழனோடை டேம் கால்வாய்க்கு அழைத்து சென்று முட்புதரில் இருந்து சுமார் 19 அங்குலம் நீளமுள்ள அருவாள் ஒன்று, சுமார் 25 அங்குலம் நீளமுள்ள உருட்டு கட்டை - 1, 32 அங்குலம் நீளமுள்ள உருட்டு கட்டை - 1 ஆகியவற்றை எடுத்து என்னிடம் ஒப்படைத்தார் . அவற்றை அதே சாட்சிகளின் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன் . அதில் எதிரிகளும் சாட்சிகளும் சாட்சி கையொப்பம் செய்தார்கள் .**அந்த மகஜர் அ.சா.ஆ.15**. அங்கிருந்து எதிரி மற்றும் வழக்குச் சொத்துக்களுடன் காவல் நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் .

09.02.2015 ம் தேதியன்று எதிரி குமாரியை 13.00 மணிக்கு சுப்பிரமணி என்பவரின் நிலத்தில் கைது செய்து அவரைநிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கில் இறந்துபோன பரசுராமனை முதலில் பரிசோதனை செய்த திருவண்ணாமலை அரசு மருத்துவமனை அரசு மருத்துவர் ராஜகுரு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டு நகல் பெற்றேன். பின்னர் பரசுராமன் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த அரசு மருத்துவர் நாகேந்திரகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். சடலக்கூராய்வு அலுவலுக்கு சென்ற மு.நி.கா முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மாதிரி இறுதியறிக்கை தயார் செய்து உதவிஇயக்குனர் குற்ற வழக்குகள் அவர்களிடம் கருத்தை பெற்று சட்டப்பிரிவுகள் 147, 148, 323, 324, 294(பி), 302, உ/இ 149 இதசபடி எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் அ.சா.6 சேட்டு அ.சா.7 பாண்டுரங்கன், அ.சா.8 சீனுவாசன், மற்றும் அ.சா.9 ஏழுமலை ஆகியோர்கள் அரசு வழக்குக்கு ஏற்றவாறு கூறினார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -</u>

(1) உதவி ஆய்வாளர் தமிழரசியிடம் அ.சா.1 கல்பனா எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கல்பனாவிடம் எழுதாத வெள்ளை பேப்பரில் பிரேத பரிசோதனைக்காக கையொப்பம் பெற்றுக்கொண்டு பின்னர் புகார் வாக்குமூலம் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதுபோல் தயாரிக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் பேரில் சம்பவயிடத்திற்கு சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் சாட்சிகளை விசாரணை செய்ததாகவும் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் 06.01.2015 ம் தேதியன்று காலை 11.30 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்றேன். 06.01.2015 ம் தேதியன்று மதியம் 12.25 மணிக்கு பரசுராமன் இறந்ததாக தகவல் கிடைத்தது. நான் தயார் செய்த மாதிரி வரைபடத்தில் SOC என்று குறிப்பிடாமல் ஒரு நபர் படுத்திருப்பது போலவும் ,அவரை சுற்றி பல நபர்கள் இருப்பது போன்று உள்ளது என்றால் சரிதான். நான் நேரில் பார்த்ததை தான் இந்த வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன். நான் உண்மையிலேயேசம்பவ இடத்திற்கு சென்றிருந்தால் உண்மையான வரைபடம் இருந்திருக்கும் என்றால் சரியல்ல.. நான் சாட்சிகளிடம் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரிகளை கைது

செய்யவில்லை என்றால் சரியல்ல . என்னிடம் எதிரி வேலு எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல . நான் அவர்கள் சொல்வதுபோல் வழக்குசொத்துக்களை கைப்பற்றுவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்துக்கள் அ .சா.1 கல்பனாவிடம் நான் கேட்டு வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல .. நான் அந்த வழக்கு சொத்துக்களை பிரேத பரிசோதனை மருத்துவரிடம் காண்பித்து கருத்து பெறவில்லை . இந்த வழக்கில் நான் புலன் விசாரணை எதுவும் செய்யாமல் எதிரிகளின் மீது பிரிவு மாற்ற அறிக்கையும் „ குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல .. இந்த வழக்கில் இறந்து போன பரசுராமனுக்கும் , எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல. நான் தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்து அதற்கு ஏற்றவாறு சான்று பொருட்கள் மற்றும் சான்றாவணங்களை வழக்கில் உட்புகுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல . நான் குறிப்பிட்டுள்ள செய்கைக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல .. நான் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/-B.C. Gopinath.,M.L.,
Additional District Judge,
Tiruvannamalai.